செ.வெ.எண்.380/2017 நாள் : 06.08.2017

# காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IIA தேர்வினை 23 ஆயிரத்து 670 பேர் தேர்வு எழுதினர்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பென்னையா இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IIA (Non Interview posts – II) க்கான தேர்வுகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தேர்வு நடைபெறும் மையமான நாராயண குரு மேல்நிலைப் பள்ளி மற்றும் ராணி அண்ணாதுரை பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் தேர்வு நடைபெறுவதை ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 54 தேர்வு மையங்களில் 103 தேர்வு அறைகளில் தேர்வு நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதிலும் 32 ஆயிரத்து 349 தேர்வாளர்கள் இத்தேர்வினை எழுத விண்ணப்பித்தனர். காஞ்சிபுரம் வட்டத்தில் 13 ஆயிரத்து 956 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 11 ஆயிரத்து 95 பேர் தேர்வு எழுதினர். 2 ஆயிரத்து 861 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. செங்கல்பட்டு வட்டத்தில் 7 ஆயிரத்து 951 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 5 ஆயிரத்து 477 பேர் தேர்வு எழுதினர். 2 ஆயிரத்து 474 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. தாம்பரம் வட்டத்தில் 10 ஆயிரத்து 442 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 7 ஆயிரத்து 98 பேர் தேர்வு எழுதினர். 3 ஆயிரத்து 344 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. ஆகமொத்தம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் விண்ணப்பித்த 32 ஆயிரத்து 349 பேரில் 23 ஆயிரத்து 670 பேர் தேர்வு எழுதினர். மீதமுள்ள 8679 பேர் தேர்வு எழுத வருகைபுரியவில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியிடுபவர்**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்